இடர் முகாமைத்துவ வழிமுறைகளின் மேற்கொள்ளலை கோரியது என்பவை உந்து ஊர்திகள் தொடர்பிலான கொடுகடன் வசதிகளுக்கான கடன் பெறுமதி விகதிம் மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2018ஆம் ஆண்டிற்கான வங்கித்தொழில் சட்ட பணிப்புரை இல.03இனால் திருத்தப்பட்டது.

2018 ஓகத்து 21 - 2018 ஓகத்து 21 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நிதியியல் பெறுதிகள் மீதான 2018ஆம் ஆண்ற்கான வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் இல.04 வழங்கப்பட்டது. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கான 2017 நவெம்பர் 29 என திகதியிடப்பட்ட நிதியியல் பெறுதி கொடுக்கல்வாங்கல்கள் மீதான 2017ஆம் ஆண்டிற்கான வங்கித்ததொழில் சட்ட பணிப்புரை இல.06, செலாவணி கட்டுப்பாட்டாளர் மற்றும் பன்னாட்டு நடவடிக்கைகளின் பணிப்பாளரினால் 2009 ஓகத்து 01 அன்று வழங்கப்பட்ட நிதியியல் பெறுதி உற்பத்திகள் மீதான பணிப்புரைகள், மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் 2013 சனவரி 02 அன்று வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மீதான அனுமதிக்கப்பட்ட தரகர்களுக்கான பணிப்புரைகள் என்பவையை என்பதை இந்த புதிய பணிப்புரைகள் இரத்துசெய்கின்றன.

2018 ஓகத்து 23 - 2018 பெப்புருவரி 08ஆம் திகதி வழங்கப்பட்ட உந்து ஊர்திகள் தொடர்பான, கொடுகடன் வசதிகளுக்கான கடன் பெறுமதி விகிதம் மீதான 2018ஆம் ஆண்டிற்கான வங்கித் தொழில் சட்டப் பணிப்புரை இல.01 ஐ மேலும் திருத்தி 2018ஆம் ஆண்டிற்கான வங்கித்தொழில் பணிப்புரைகள் இல.05 வழங்கப்பட்டு அரசினால் வழங்கப்பட்ட முன்மொழியப்பட்ட சலுகையான குத்தகை வசதிக்குக்கீழ் கடினமான பிரதேசங்களில் சேவையாற்றும் பொது சேவையிலுள்ள கள அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் மோட்டார் சைக்கில்களை கொள்வனவுசெய்வதற்கு வழங்கப்படும் கொடுகடன் வசதிகள் மீதான கடன் பெறுமதி விகிதத்தின் ஏற்புடைத்தன்மையை நீக்குதல் மற்றும் இதுபோன்ற கொடுகடன் வசதிகளின் வழங்கல் தொடர்பில் உள்ளக எல்லைகளை பேணி போதியளவு இடர்நேர்வு முகாமைத்துவ வழிமுறைகளை மேற்கொள்ள கோரியது.

2018 செத்தெம்பர் 19 - குறிப்பிட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் இணைந்து திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராக 100 சதவீதமான குறைந்தபட்ச பண எல்லை விதிக்கப்பட்டது.

- மேற்குறிப்பிடப்பட்ட நாணயக் கடிதங்களுக்கு எதிராக வைக்கப்பட்ட பண எல்லை மீது குறைந்தபட்ச ஒதுக்குத் தேவைப்பாடு 100 சதவீதமாக விதிக்கப்பட்டது.

2018 செத்தெம்பர் 28 - உந்து ஊர்திகள் தொடர்பிலான கொடுகடன் வசதிகளுக்கான கடன் பெறுமதி விகிதம் மீது 2018 பெப்புருவரி 08இல் வழங்கப்பட்ட 2018ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் இல. 01ஐ மேலும் திருத்தி 2018ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் இல. 06 வழங்கப்பட்டது. இதற்கேற்ப, சட்டத்தின் பணிப்புரைகள் 2.1 பதலீடுசெய்யப்பட்டு கலப்பு உந்து ஊர்திகள், வேன்கள் மற்றும் கடுவழிப் பயண ஊர்திகள மீது ஏற்புடைய கடன் பெறுமதி விகிதத்தை குறைக்கப்பட்டது. மேலும், அறிவிக்கப்படும்வரையில் இலங்கை அரசினால் சலுகை ரீதியிலான உந்து ஊர்திகளுக்கான அனுமதிப்பத்திரங்களில் வழங்கல் செயற்றிட்டத்திட்டத்திற்கு கீழ் இறக்குமதி செய்வதற்காக கடன் கடிதங்கள் திறப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

2018 செத்தெம்பர் 29 - அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்கள் மற்றும் உந்து ஊர்திகளின் இறக்குமதியிற்கான உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் திறக்கப்பட்ட நாணய கடிதங்களுக்கு எதிராக, முறையே 100 சதவீத மற்றும் 200 சதவீதமான குறைந்தபட்ச பண எல்லை விதிக்கப்பட்டது.

2018 ஒத்தோபர் 01 - 2018 செத்தெம்பர் 29இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகளுக்கு நாணயக் கடிதங்களுக்கு

எதிராக வைக்கப்பட்ட எல்லைகள் மீது குறைந்தபட்ச ஒதுக்குத் தேவைப்பாடு 100 சதவீதமாக விதிக்கப்பட்டது.

இனிவர இருப்பவை - 1988ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டம் இல. 30இனை திருத்துவது

- பாசல் III இன் கீழ் தேறிய உறுதியான நிதியிடல் விகிதத்தை நடைமுறைப்படுத்தல்.
- பாசல் III இன் கீழ் முடுக்கி விகதித்தை நடைமுறைப்படுத்தல்.
- உரிமம்பெற்ற வங்கிகளுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 மீதான வழிகாட்டல்களை மேற்கொள்ளல்
- கம்பனி ஆளுகைக்கு கீழ் பொருத்தமுடைமை மற்றும் செம்மை மதிப்பீடு பிரமாணங்களை வலுப்படுத்தல்
- உரிமம்பெற்ற வங்கிகளின் புலம் பெயர்ந்த அலுவலர்களின் தொழில்நிலை மீது வழிகாட்டல்களை வழங்குதல்
- உரிமம்பெற்ற வங்கிகளுக்கான புதிய பங்கு மூலதன உடமைக் கொள்கையினை அறிமுகப்படுத்தல்
- உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மீட்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தல் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

## உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்

2018 சனவரி 16 - நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு தொடர்பாக 2018இன் 01ஆம் இலக்க நிதித்தொழிற் சட்டப் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. 2018 சனவரி 22இல் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு அதே பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

2018 பெப்புருவரி 08 - 2018 சனவரி 01இலிருந்து, முதன் முதலில் பதிவு செய்யப்பட்ட பிறகு இலங்கையில் ஒரு வருடத்திற்குக் குறைவாக பயன்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஊர்திகள் மற்றும் இலத்திரனியல், கலப்பு மற்றும் ஏனைய பதிவு செய்யப்படாத ஊர்திகள் கடன் வசதிகளுக்கு பிரயோகிக்கத்தக்க கடன் பெறுமதி விகிதத்தை குறித்துரைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டது. மேலும், 2018 யூன் 07, 2018 ஓகத்து 24 மற்றும் 2018 ஒத்தோபர் 01இல் இத்தகைய பணிப்புரைகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன.

2018 மாச்சு 05 - 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழிற் சட்டத்தின்படி சென்டிரல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பொது வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு வழங்கிய உரிமம் இரத்து செய்யப்பட்டதுடன் திரவப்படுத்தும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது.

2018 மாச்சு 13 - மத்திய வங்கிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கவாறான ஓர் கடன் தரமிடல் முகவரிடமிருந்து கடன் தரமிடல் பெறவேண்டும் எனவும் இது 2018 ஒத்தோபர் 01இற்கு முதல் பிரசுரிக்கப்பட்வேண்டுமென சகல உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

2018 யூன் 06 - இடர்நேர்வு முகாமைத்துவம் மீது அதிக கவனஞ்செலுத்துவதை நிர்மாணிப்பதற்கும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் இடர்நேர்வுக் கணிப்பீட்டு திறன்களில் தற்போது நடைபெறுகிற முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் முகமாக உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான ஓர் புதிய மூலதன போதுமாந்தன்மை கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.

| | | |
|---|---|---|
| | | அசையாச் சொத்துக்கள் தொடர்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் மதிப்பீட்டு முறைகளின் ஒழுங்குபடுத்தலுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 2018 யூலை 25 | - | 2011இன் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின்படி த ஸ்டான்டர்ட் கிறெடிட் பினார்னஸ் லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்யப்பட்டதுடன் திரவப்படுத்தல் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது. |
| 2018 செத்தெம்பர் 04 | - | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிமூலங்களிலருந்து பெறல் தொடர்பான ஒழுங்குமுறைகளை தரப்படுத்துவதற்கு வர்த்தகத் தொழிற்பாட்டுகளை வெளிமூலங்களிலிருந்து பெறுவதற்கான பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| இனிவர இருப்பவை | - | அறிவிடா மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகளை அமைத்தல், சொத்துடமை எல்லைகள், கடன் பெறுகைகள் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவத்திற்கான பணிப்புரைகள் வழங்கல் |
| | | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் நடைமுறைபடுத்தல் மீதான வழிகாட்டல்களின் வழங்கல் |
| | | “நிதிக் கம்பனிகள் முடிவுறும்போது கோரல்களின் முன்னுரிமை” மீது ஒழுங்குபடுத்தலை வழங்கல் காப்புறுதி |

## காப்புறுதி

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 09 | - | நிதி சார்ந்த சட்டத்திற்கு முரணான செய்ற்பாடுகள் இல்லாவிடில் மோசடியின் அடிப்படையில் பணியிலிருந்து நிறுத்தப்பட்ட ஊழியர்களை பணியில் அமர்த்துவதை தவிர்ப்பதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2018 பெப்புருவரி 16 | - | அனைத்து நீண்டகால காப்புறுதி கம்பனிகளுக்கும், காப்புறுதி நிதி முகாமைத்துவம் தொடர்பான வழிமுறைகள் இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்டது. |
| 2018 மாச்சு 20 | - | 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதி திருத்தச் சட்டத்தின் 96 அ பிரிவின் நியதிகளில், அனைத்து நீண்ட கால காப்புறுதி கம்பனிகளுக்கு பொறுப்புக்களின் மதிப்பீட்டு முறையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களிலிருந்து எழும் ஒரே தடவையிலான மிகையின் இனங்காணல் மற்றும் முறைப்படுத்தலுக்கான முறையியல் தொடர்பில் இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| 2018 மே 01 | - | காப்புறுதி தரகர்களின் பதிவுக்கட்டணம் அதிகரிக்கப்பட்டது. |
| 2018 மே 24 | - | உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளிடமிருந்து முன்னோடிகளை பெறுகின்ற காப்பீட்டாளர்கள் மற்றும் தரகர்களுக்கான வழிகாட்டல்களை இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழு வழங்கியது. |

## சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி

| | | |
|---|---|---|
| 2018 சனவரி 04 | - | இலங்கைக்கான ஓர் தேசிய நிதியியல் உள்ளடக்கத்திற்கான உபாயத்திடத்தை உருவாக்குவதற்காக பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் கூட்டுறவு ஒப்பந்தம் கைத்சாத்திடப்பட்டது. |
| 2018 மாச்சு 12 | - | வேளாண்மை அபிவிருத்தியிக்கான பன்னாட்டு நிதியினால் நிதியளிக்கப்பட்ட சிறு உடமையாளர்களுக்கான வேளாண்மை வியாபாரத்திற்கான பங்குடமை திட்டத்தினை நடைமுறைபடுத்துவதற்காக இலங்கை அரசாங்கததுடன் ஓர் நிருவாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. |

